
# நீதிக் கதைகள்-02



சிறுவர் பகுதி


# விருந்தாளியின் கடமை

கதை: மாது
படம்: சங்கர்...











அரக்கு மாளிகையிலிருந்து தப்பிய பாண்டவர்கள் ஏகசக்ரா என்ற நகரத்தை அடைந்தனர். அங்கே அவர்கள் தாங்கள் யார் என்பதைக் காட்டிக்கொள்ளாமல் வாழ முடிவு செய்தனர்.
ஓர் ஏழை அந்தணர் அவர்களுக்கு இருப்பிடம் தந்து உதவி செய்தார்.
ஐயோ பாவம், வெளியூர்க்காரர்களா? என் வீட்டிலேயே நீங்கள் தங்கியிருக்கலாம். உங்களுக்கு உதவுவதால் நான் குறைந்து போய்விட மாட்டேன்.
4
ஒரு நாள் யுதிஷ்டிரரும் மற்றச் சகோதரர்களும் வழக்கம்போல் நகருக்குள் பிக்ஷை வாங்கி வரச் சென்றிருந்தனர். பீமனும் குந்திதேவியும் மட்டும் வீட்டில் இருந்தனர். அப்போது...
அம்மா! யாரோ அழுவது போலில்லை?
5
வா, போய்ப் பார்ப்போம்.
புறக்கடையில் கவலையே உருவாக வீட்டுக்கார அந்தணரும் அவரது மனைவியும் அழுது கொண்டிருந்தனர். திடுக்கிட்டனர் பீமனும் குந்தியும்.
என்ன விஷயம் தாயே? உங்களுடைய துக்கம் என்னவென்று நாங்கள் அறியலாமா?
6
இந்த நகரைப் பிடித்த துரதிருஷ்டக் கதையை என்னவென்று நான் சொல்வேன்!
அந்தணனின் மனைவி விவரித்தாள்...
7
பகாசுரன் என்ற ஓர் அசுரன் அருகிலுள்ள மலையிலிருந்து நினைத்தபோது நகருக்கு வந்து கைக்குக் கிடைத்தவர்களையெல்லாம் கொன்று தின்று அட்டூழியம் செய்து கொண்டிருந்தான்.



எனவே நகரமக்கள் பகாசுரனிடம் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.
8
பகாசுரா, உன் வயிறுக்கு வேண்டியது தீனிதானே? ஏன் ஏராளமானபேரைக் கொல்கிறாய்? நாங்கள் ஒவ்வொரு வீட்டாரும் முறை வைத்துக்கொண்டு தினமும் உன் இருப்பிடத்திற்கு நீ தின்-பதற்கு ஓர் ஆளையும் ஒரு வண்டி உணவையும் அனுப்பி வைக்கிறோம்.
ஹ...ஹ...ஹ... ஒப்பந்தத்தை மீறினால் மறுபடியும் வந்து ஊரிலுள்ள அத்தனை பேரையும் கொன்று விடுவேன்.....
அந்தணன் மனைவி சோகத்துடன் பீமனிடம் சொன்னாள்.
இன்று பகாசுரனின் உணவுக்கு எங்கள் வீட்டிலிருந்து ஒருவர் செல்ல வேண்டும். அதுதான் அழு-கிறேன். எங்களுக்கு இருப்பதோ ஒரே ஓர் மகன். என் கணவரோ வயதானவர். நான் சென்று பகா-சுரனுக்கு இரையாகலாமென்றாலோ, அவன் பெண்களைத் தின்ன-மாட்டான்.
9
குந்திதேவிக்கு இரக்கமேற்பட்டது.
தாயே! உங்கள் வீட்டிலிருந்து ஒருவன் போகவேண்டும். அவ்வளவு-தானே? உங்கள் மகனுக்குப் பதில் இதோ என் மகன் பீமனைப் பகாசுரனுக்கு உணவாக இன்று அனுப்பி வைக்கிறேன்.
10
குந்தியின் யோசனைக்கு அந்தணர் சம்மதிக்கவில்லை.
11
என் வீட்டுக்கு விருந்தாளியாக வந்தவர்கள் நீங்கள். எங்களுக்காக உங்-கள் மகனை நீங்கள் இழக்கச் சம்மதிக்-கவே மாட்டோம். நான் வயதானவன். பழைய துணி நைந்து கிழிந்து அழிவது போல் என் உடல் இன்னும் சில நாளில் தானா-கவே போகத்தான் போகிறது. அதற்கு முன் நானே பகா-சுரனுக்குப் பலி-யாகிறேன்.


குந்தி ஆறுதல் சொன்னாள்.
எங்களை விருந்தாளிகளாக மதித்து அன்புடன் இடம் கொடுத்திருக்கிறீர்கள். வீட்டுச் சொந்தக்காரருக்கு ஒரு துன்பம் வந்தால் அதிலிருந்து அவரை மீட்பது விருந்தாளிகளின் கடமையல்லவா? என் மகன் பீமனின் பலத்தைப்பற்றி உங்களுக்குத் தெரியாது. இவன் பகாசுரனையே கொன்றுவிடக்கூடியவன். அப்படியே இவன் இறந்தாலும்கூட எனக்கு மீதி நாலு பிள்ளைகள் இருப்பார்கள்.
12
அந்தணர் கடைசியில் சம்மதித்தார். பீமன் வண்டி நிறையச் சோறுடன் பகாசுரனைச் சந்திக்கச் சென்றான்.
வந்த இடத்தில் எனக்கு இப்படி ஒரு சவாலா? சபாஷ்!
13
பீமனுக்கும் பகாசுரனுக்-கும் பயங்கர யுத்தம் நடந்தது. இறுதியில் பகாசுரன் இறந்தான்.
14
பகாசுரனைக் கொன்று வெற்றியுடன் திரும்பிய பீமனையும், அவனை அனுப்பிவைத்த தாய் குந்தியையும் மக்கள் புகழ்ந்தனர்.
இருக்க இடம் கொடுத்து உபசரித்தவர்களின் உயிரைக்-காப்பாற்றத் தன் மகனைப் பலி கொடுக்கத் துணிந்த இந்தத்-தாயின் கருணையே கருணை!!!



தேவ கானம்
கதை : ஜனு
படம் : சங்கர்...
டில்லி பாதுஷா அக்பர் சக்கரவர்த்தியின் அரண்மனைப் பாடகருக்குப் பெரும் புகழ் பெற்றவன் தான்சேன். அற்புதமான பாடகன். சங்கீததேவதையின் அருளையும் குருவின் அருளையும் பரிபூர்ணமாகப்-பெற்றவன்.
ஒரு நாள் அக்பர் சக்கரவர்த்திக்கு முன்னால் தான்சேன் கானமழை பொழிந்துகொண்டிருந்தான். அக்பர் மெய்ம்மறந்து போனார்.
1
தான்சேன்! உன்னை இசையிலே மிஞ்சக்கூடியவன் உலகில் எவனுமே இருக்க மாட்டான்! ஆகா! என்ன அற்புதமான பாட்டு!
இல்லை, பாதுஷா அவர்களே! என்னை மிஞ்சக் கூடியவர் ஒருவர் இருக்கிறார்!
2
அப்படியா? யார் அவர்? எங்கே இருக்கிறார் அவர்?
அவர் சாமானியரல்ல. பெரிய மகான்! அவரே என் குருமகராஜ்-ஹரிதாஸ் சுவாமிகள்! பிருந்தாவனத்தில் நிதுவனம் என்ற இடத்தில் இருக்கிறார்.
சபையில் இருந்த ஒரு மந்திரி எழுந்தார்.
3
உங்களையும் மிஞ்சிப் பாடக்கூடியவர் என்றால் அவரை இங்கே அழைத்து-வரச் சொல்லலாமே!
அவர் பிருந்தாவனத்தைவிட்டு எங்கும் வருவதில்லை. பல மன்னர்கள் முயன்று பார்த்து விட்டார்கள்!
பல கலைகளையும் அனுபவிப்பதில் தேர்ந்த அக்பர் சக்கரவர்த்தி ஆவலை அடக்கமாட்டாமல் யோசனையில் ஆழ்ந்தார்.
4
சக்கரவர்த்தி அவர்கள் நினைத்தால் அவரை அழைத்து வரவா முடியாது?
பெரிய மகான்கள் விஷயத்தில் நாம் நினைத்தபடி குறுக்கிடலாகாது. ஆனால் தான்சேன், அவர் பாட்டைக் கேட்க என்னதான் வழி?


ஒரே வழிதான் இருக்கிறது. பாதுஷா அவர்கள் என் சிஷ்யன்போல் மாறுவேஷம் போட்டுக்கொண்டு வந்தால் கேட்கலாம்!
அவ்வளவுதானே! அப்படியே போவோம்! பெரிய மகான் என்றால் நாமே அவரைத் தேடிப்போவதுதான் சிறந்தது.
அவ்வாறே மாறுவேடம் அணிந்து பாதுஷா தான்சேனுடன் பிருந்தாவனத்துக்குச் சென்றார்.
6
குரு மகராஜ்! வணங்குகிறோம்!
நெடுங்காலம் சுகமே வாழ்வீர்களாக!
நந்தவனத்தில் மாலை வரையில் மாறுவேஷம் போட்ட சிஷ்யனுடன் பொழுதைப் போக்கிவிட்டு, குருவுக்கு முன்னால் சென்று அமர்ந்து பாட ஆரம்பித்த தான்சேன், நடுவில் வேண்டுமென்றே தப்பாகப் பாடினான்.
7
தான்சேன்! நடுவில் தப்பாகப் பாடுகிறாய்! இப்படிப் பாடு!
குருதேவர் தம் பாட்டில் தாமே லயித்துப்போய், மெய்ம்மறந்து பாடிக்கொண்டே போகிறார். பாதுஷா பிரமித்துப்போய் உட்கார்ந்து விடுகிறார்.
8
பாட்டா இது! தேவகானம்! ஆகா!


பாடிக்கொண்டே போன குருதேவர் கிருஷ்ணப்பிரேமையில் லயித்து, தியான நிலையில் மூர்ச்சையாகி விழுந்து விடுகிறார்.
9
பாதுஷா அவர்களே! என்ன, அப்படிச் சமைந்துபோய் விட்டீர்களே!
தான்சேன்! இப்படிப்பட்ட குருவைப் பெற்ற நீ பாக்கியசாலி. இது என்ன கானம்! கல்லும் கரைந்து உருகும் தெய்விக இனிமை. உயிரையே உலுக்குகிற இந்தத் தெய்விக சக்தி இவர் பாட்டுக்கு எப்படி வந்தது?
தான்சேன் குருதேவருக்கு விசிறி, அவரை ஆசுவாசப்படுத்துகிறான்.
10
பெருமை மிக்க சக்கரவர்த்தி அவர்களே! இது தெரியவில்லையா? குரு மகராஜ் என்னைப்போல சக்கரவர்த்திகளுக்காகப் பாடுவதில்லையே, சர்வேசுவரனுக்கு அர்ப்பணமாக அல்லவா பாடுகிறார்? அமிர்த தாரையாகப் பொழிவதற்குக் கேட்பானேன்?
11
ஆமாம் தான்சேன். அதுதான் உண்மை! ஆண்டவன் ஒருவனைத் தவிர, வேறு யாருக்காகவும் இவர் பாடாததால்தான் இது தேவகானமாக இருக்கிறது!
குரு மகராஜ்கி ஜய்!
சமாதி நிலை கலைந்து, ஹரிதாஸர் கண்விழித்து எழுந்து அமருகிறார்.
12
குரு மகராஜ்! மன்னித்தருள வேண்டும்! இவர் என் சிஷ்யன் போல மாறு வேஷத்தில் வந்தாலும் இந்துஸ்தானத்தின் பாதுஷா. இந்தத் தெய்விக கானத்தைப் பருகும் ஆவலில் இப்படி வர நேர்ந்தது. எங்களை ஆசீர்வதித்தருள வேண்டும்!
நான்தான் வந்ததுமே வாழ்த்திவிட்டேனே. எல்லாம் இறைவனின் விளையாட்டு! எல்லாருடைய இதயங்களிலும் அவனே உறைகிறான். அவனே இசையின்பத்தில் கலந்திருக்கிறான். அவன் பெருமை நீடூழி வாழ்க!
அக்பர் சக்கரவர்த்தியும் தான்சேனும் டில்லிக்குத் திரும்புகிறார்கள். 'ஹரிதாஸ் கே ஸ்வாமி ச்யாம்' என்று கானம் காற்றில் மிதந்து வருகிறது.
13
தான்சேன்! என் இதயம் அனுபவித்தறியாத இன்பத்தால் நிறைந்திருக்கிறது. ஹரியும் அல்லாவும் வேறு வேறு அல்ல என்ற உண்மை இப்போது எனக்குப் புலனாகிறது! எனது நன்றியை ஏற்றுக்கொள்!
ஹரிதாஸ் கே ஸ்வாமி ச்யாம்! குரு மகராஜ்கி ஜய்!
ராதாஷ்டமியன்று அவதரித்த பக்த ஹரிதாஸரின் இன்னிசைப் பாடல்கள் பிருந்தாவனம் எங்கும் அன்று எதிரொலித்தன. இன்று அந்தத் தேவகானம் பாரத நாடு முழுவதுமே எதிரொலித்துக்கொண்டிருக்கிறது.
14


# கடவுளுக்கு நிழல் தந்த அழகி

கதை : பரமஹம்சதாஸ் படம் : சங்கர்...

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு...

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு தமிழகம் முழுவதும் ஆட்சி செய்து வந்த ராஜராஜ சோழச் சக்கரவர்த்தி தஞ்சையில் பெருங்கோயில் எழுப்பிக்கொண்டிருந்தான்.

மழை, வெயில், ஊண், உறக்கம் பாராமல் நூற்றுக்கணக்கான சிற்பிகள் கோயிற்பணியில் ஈடுபட்டிருந்தனர்.





அதே ஊரில் அழகி என்ற ஓர் ஏழைக் கிழவி.







மோர் கொடுத்த அழகிப் பாட்டியின் மனதில் பளிச்சென்று ஓர் எண்ணம்- அவள் முகம் மலர்கிறது.
கோவிலில் வேலை செய்யும் சிற்பிகளுக்கு மோர் கொடுப்பதையே ஒரு சிவ கைங்கர்யமாகச் செய்தால் என்ன?
4
மறு நாள் முதல் தான் நினைத்தது போலவே சிற்பிகளுக்கு அழகிப்பாட்டி நீர்மோர் கொடுத்தாள்.
5
பாட்டி, நீ நல்லா இருக்கணும். தினமும் மணக்க மணக்க வெயில் வேளையில் எங்களுக்கெல்லாம் நீர்மோர் கொண்டு வந்து தருகிறாய்.
வாங்கிக் குடிப்பா தம்பி. கோவில் வேலை செய்யறே.
கோவில் வேலைகள் பூர்த்தியாகும் நேரம். கோபுர விதானத்தில் கருவறைக்குமேல் கல் பதிக்கும் வேலைதான் பாக்கி. தகுந்த கல்லாகத் தேடிக்-கொண்டிருந்தார் தலைமைச் சிற்பி. அழகிப் பாட்டியின் முகத்தில் கவலை ரேகை.
6
என்ன பாட்டி, சோர்ந்துட்டே? கோவில் வேலை முடிந்ததும் நாங்க-ளெல்லாம் போய்விடுவோமே, நீர்மோர் யாருக்கும் தரமுடியாதேன்னு கவலைப்படறியா?
அதைவிடப் பெரிய கவலை. ஆண்டவன் கோவிலுக்கு இந்த ஏழையால் ஒரு சின்னக் காணிக்கைக்கூடத் தரமுடியலியே!
7
சக்கரவர்த்தி கட்டும் கோவிலுக்குக் காணிக்கை தர நீ என்ன பணக்-காரியா என்ன?



அழகிப் பாட்டிக்கு ஒரு யோசனை உதித்தது. அவள் குடிசைக்கு முன்னே ஒரு பெரிய கல் நீண்ட நாளாக இருந்தது. ஆனால் தன் ஆசையை வெளிப்படுத்த அவளுக்குக் கூச்சமாயிருந்தது.
8
சிற்பி அவர்களே, எனக்கு ஓர் ஆசை. நிறைவேற்றி வைப்பீர்களா, சொல்லுங்கள்.
உன் ஆசை என்ன சொல். முடிந்தால் நிறைவேற்றுகிறேன்.
எனக்குச் சொந்தமான குடிசை வாசலில் பல வருஷங்களாக ஒரு பிரம்மாண்டமான கல் இருந்து வருகிறது. அதை நீங்கள் கோபுர விதானத்தில் வைப்பதற்கு உபயோகிக்க முடியுமா?
கல்லமைச் சிற்பி கிழவியின் ஆசையை நிறைவேற்றினர். கிழவியின் வீட்டுக்கு ஆட்களை அனுப்பி அதே கல்லை உரிய விதத்தில் செதுக்கி விதானத்தில் பொருத்தி-விட்டார்கள்.
9
கோவில் வேலை முடிந்து கும்பாபிஷேக நாள் வந்தது. ராஜராஜ சோழச் சக்கரவர்த்தி தான் கட்டிய கோபுரத்தைப் பார்த்து மனம் பூரித்தான்.
சிவபெருமானுக்கு இவ்வளவு அற்புதமான கோபுரத்தை எந்த மன்னனும் இதுவரை கட்டியதில்லை



அன்றிரவு சக்கரவர்த்திக்கு ஒரு கனவு. கனவில் சிவபெருமான் தோன்றினார்.
10
மன்னா, பெருங்கோயிலிலே அழகி என்ற கிழவி அமைத்துக் கொடுத்த நிழலில் தங்குவதில் எமக்கு மிகுந்த மகிழ்ச்சி.
கண் விழித்த சக்கரவர்த்தி திடுக்கிட்டார்.
11
இவ்வளவு பெரிய கோயிலை எம்பெருமானுக்காக நான் கட்டினேன். ஆனால் இறைவனோ அழகி என்ற கிழவி தந்த நிழலில் தங்குவதில் திருப்தி அடைகிறாரே! யார் அந்த அழகிக் கிழவி?
மறுநாளே மந்திரிகளை அனுப்பி விசாரித்து அறிந்தவன் அழகிப் பாட்டியைக் காணச் சென்றான்.
12
மூதாட்டியே! சிவபெருமானுக்குத் தாங்கள் என்ன தொண்டு செய்தீர்களோ எனக்குத் தெரியாது. ஆண்டவன் தாங்கள் தந்த நிழலில் தாம் மகிழ்ச்சியாக இருப்பதாக என் கனவில் கூறினார்.
சக்கரவர்த்தி அவர்களே! இந்த ஏழைக்கிழவி ஒரு தொண்டும் செய்யவில்லை. கோவிற்பணியில் ஈடுபட்டிருந்த சிற்பிகளுக்கெல்லாம் வெயில் சமயத்தில் நீர்மோர் கொடுத்தேன். என் வீட்டுமுன் இருந்த கல்லை விதானத்துக்கு உபயோகப்படக் கொடுத்தேன், அவ்வளவுதான்.
சக்கரவர்த்தியின் கைகள் அழகியைத் தொழுதன.
13
இறைவன் அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை என்பதை நான் புரிந்து கொண்டேன்.
இன்றைக்கும் தஞ்சையில் அழகிக்குளம் என்று ஒரு குளம் இருக்கிறது. அழகிப்பாட்டியின் குடிசை இருந்த மனையில்தான் இன்றைய தஞ்சை நகராட்சி அலுவலகம் உள்ளது.


# சந்தன வியாபாரி

கருத்து: **பத்மா தேசிகன்** கதை: **பரமஹம்சதாஸ்** படம்: **சங்கர்...**

அரசர் மகேந்திரன் அமைச்சருடன் நகர்வலம் வந்தார். ஒரு வீட்டுத் திண்ணையில் ஒரு மனிதன் ஏதோ யோசித்தபடி உட்கார்ந்திருந்தான். அரசர் அவனைப் பார்த்தவாறே சென்றார். மறுதினம் அதே நேரம். அந்த மனிதன் முதல் நாள் போலவே சிந்தையிலிருப்பதை அரசர் பார்த்தார்.




அமைச்சரின் விருப்பப்படியே புதிய புதிய கட்டில்கள், ஆசனங்கள், வாசல்நிலைகள் யாவும் சந்தன மரத்தில் செய்து முடிக்கப்பட்டன. அரண்மனையே சந்தன மணத்தால் நிறைந்தது. ஆலயத்தேரும் அழகாகச் செய்து முடிக்கப்பட்டது.
5
ஆகா. அபாரம்! பொருத்தமான தேர்!
மாதங்கள் சில சென்றன. அரசர் மீண்டும் அமைச்சருடன் நகர்வலம் வந்தார். முன்பு பார்த்த அதே மனிதனை அரசர் இப்போதும் பார்த்தார்.
6
அமைச்சரே! நினைவிருக்கிறதா? அந்த மனிதனை முன்பு பார்த்தபோது அவனைத் தண்டிக்க வேண்டும் என்ற குரூர எண்ணம் தோன்றும் எனக்கு.
ஆம் அரசே! சொல்லியிருக்கிறீர்கள்!
7
ஆனால் இன்று பார்க்கிறபோதோ எனக்கு அவன் மேல் எந்த வெறுப்பும் தோன்றவில்லை. இது ஏன்? உங்களால் விளக்க முடியுமா?
விளக்குகிறேன் வேந்தே. அரண்மனைக்குப் போகலாம்!


அரண்மனையை அடைந்து, நந்தவனத்தில் உலாவும்போது...
8
அரசே! அந்த வணிகன் சந்தன மர வியாபாரி. பல மாதங்களாக நகரில் சந்தனக் கட்டைகள் யாரும் வாங்குவாரில்லாமல் போகவே அந்த வணிகன் மனத்தில் ஒரு விபரீத எண்ணம் தோன்றியது. அரசர் இறந்தால் சந்தனக் கட்டைகள் ஏராளமாகத் தேவைப்படுமே என்று நினைத்துக் கொண்டிருந்தான். அவன் மனத்தில் அந்தக் குரூர எண்ணம் இருந்ததால் அவனைப் பார்த்ததுமே உங்களுக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது.
9
இப்போது எனக்கு அந்த வெறுப்பு ஏற்படாத காரணம்?
தங்கள் அனுமதியின் பேரில் அரண்மனைக்கும் ஆலயத் தேருக்குமாக ஏராளமான சந்தன மரங்களை வாங்கினேன். அது தவிர, தங்கள் திரு நட்சத்திரத்தின்போது ஒவ்வொரு மாதமும் சந்தனக் கட்டைகளை வாங்கி, மக்களுக்குத் தானம் செய்து வருகிறோம்.
10
அதனால், தனக்கு நிறைய வியாபாரம் கொடுக்கும் அரசர்பிரான் நீடூழி வாழ வேண்டும் என்று அவன் நெஞ்சார நினைக்கிறான். மனத்தில் அந்த நல்ல எண்ணம் இருக்கும் காரணத்தினால் அவனைப் பார்க்கும்போது உங்களுக்கும் வெறுப்பு ஏற்படவில்லை.
அதனால்-?
11
ஆகவே ஒருவரைப்பற்றிக் கெடுதியான எண்ணம் நம் மனத்தில் ஏற்பட்டால், எதிராளிக்கும் நம்மிடம் ஒரு வெறுப்பே தோன்றும். அதுதானே உங்கள் விளக்கம்?
அது மட்டுமல்ல; ஒருவரைப் பற்றி நல்லவிதமான எண்ணத்தை நாம் ஏற்படுத்திக் கொண்டால் அவருக்கும் நம்மிடம் பிரியம், அன்பு ஏற்படும். ஆக எல்லாருமே நல்லதையே நினைக்கப் பழக வேண்டும் என்று சொல்ல வருகிறேன்.


# சஞ்சீவினி வித்தை

கருத்து: சுமுகன் கதை: சியாம் படம்: சங்கர்...


தேவகுருவான பிருகஸ்பதியின் குமாரன் கசன். அசுரகுருவான சுக்ராசாரியர் குமாரத்தி தேவயானி. இறந்தவர்களைப் பிழைக்க வைக்கும் சஞ்சீவினி வித்தையை அறிந்தவர் அசுரகுரு. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரில் மடிந்த அசுரர்களையெல்லாம் அசுரகுரு பிழைக்கவைத்து, திரும்பத் திரும்பப் போரிடச் செய்து வந்தார். தேவகுருவான பிருகஸ்பதிக்கு அந்த வித்தை தெரியாது. அதனால் தேவர்கள் கவலையடைந்து, கசனை நாடி வந்தார்கள்.



தேவலோகத்துக் கசன் சீடனாக வந்திருப்பது அசுரர்களுக்குப் பிடிக்கவில்லை. சஞ்சீவினி மந்திரத்தைக் கற்றுக்கொண்டு போவதற்கே கசன் வந்திருப்பதாக அவர்கள் நினைத்தார்கள். ஒரு நாள் கசன் குருவின் பசுக்களை மேய்க்கப் போனபோது அவர்கள் அவனைப் பிடித்து, துண்டு துண்டாக வெட்டி, நாய்களுக்கு இரையாகப் போட்டுவிட்டார்கள்.




தேவயானிக்கு ஏதோ சந்தேகம் வரவே, அவள் கலங்கிய கண்களுடன் தந்தையிடம் வந்தாள்.




சஞ்சீவினி மந்திரத்தைப் பிரயோகித்து, அசுரகுரு கசனை வா என்று அழைத்ததும், நாய்களின் உடலைப் பிளந்துகொண்டு கசன் வெளிவந்துவிடுகிறான்.




மற்றொரு நாள் கசன் தேவயானிக்காகப் பூப்பறிக்கப் போனான். அசுரர்கள் அவனை அங்கே பிடித்துக் கொன்றுவிட்டார்கள். அவன் உடலைக் கூழாக்கிக் கடலில் கரைத்துவிட்டார்கள்.




வெகு நேரமாகியும் கசன் திரும்பி வராததைக் கண்டு தேவயானிக்கு அழுகை வந்தது. அப்பாவிடம் போய்ச் சொன்னாள்.
8
கசன் இல்லாமல் நான் உண்ணவே மாட்டேன்.
கவலையை விடு. இதோ சஞ்சீவினி மந்திரத்தைப் பிரயோகம் செய்கிறேன். கசா! எங்கிருந்தாலும் உயிர் பெற்று எழுந்து வா!
கடல் பொங்கியெழ, அலைகளிலிருந்து கசன் மீண்டு வந்தான்.
9
கசா! வந்துவிட்டாயா?
எல்லாம் குருதேவனின் மகிமை!
மூன்றும் முறையாக அசுரர்கள் கசனைப் பிடித்துக்கொன்று, சுட்டுப் பொடியாக்கி, அந்தப் பொடியைக் குருதேவரின் பானத்தில் கரைத்துக் கொடுத்தார்கள்.
10
இப்ப எப்படி மந்திரத்தால் பிழைக்க வைக்க முடியும்? ஹெ ஹெ!
அதானே! நல்ல யோசனை இது!
இப்போதும் தேவயானி தந்தையிடம் ஓடி வந்து, கசனைக் காணவில்லை என்றாள். சுக்ராசாரியர் ஞானதிருஷ்டியால் பார்க்க, உண்மை விளங்கியது. கசன் பஸ்மமாக அவருடைய வயிற்றில் இருப்பது தெரியவே.....
11
கசா! சஞ்சீவினி மந்திரத்தை நான் உனக்கு உபதேசிக்கிறேன். அதைக் கற்றுக்கொள். நான் மந்திரத்தைப் பிரயோகித்ததும் நீ என் உடலைக் கிழித்துக்கொண்டு வெளியே வருவாய். பிறகு நான் உபதேசித்த அதே மந்திரத்தைச் சொல்லி என்னை உயிர்ப்பித்து-விடு. வேறு வழியில்லை.



குருதேவரின் உடல் கீழே கிடக்க, கசன் சஞ்சீவினியை ஓதி, அவரைப் பிழைத்து எழச் செய்கிறன்.
12
கசா! கெடுவான் கேடு நினைப்பான்! சஞ்சீவினி மந்திரத்தை நான் கற்றுத் தந்துவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் திரும்பத் திரும்ப உன்னைக் கொன்ருர்கள். கடைசியில் அதனுலேயே நீ சஞ்சீவினி வித்தையைக் கற்றுக்கொள்ள நேர்ந்துவிட்டது. இதுதான் தெய்வ சித்தம். ஆகவே நீ வந்த நோக்கம் பூர்த்தியாகிவிட்டது. நீ இனித்திரும்பி உன் இருப்பிடம் செல்லலாம்.
என்னை ஆசீர்வதியுங்கள்
13
தேவயானியிடம் கசன் விடை பெறும்போது.....
பிருகஸ்பதி புத்திரா! என்னை விட்டுப் பிரிந்து செல்ல உனக்கு எப்படி மனம் வந்தது?
இல்லை சகோதரி! நான் உன் தந்தையின் வயிற்றிலிருந்து வந்ததனல் உனக்குச் சகோதரன் ஆகிவிட்டேன். எனக்குச் சுபம் சொல்லி விடை கொடுத்தனுப்பு. உனக்கு மங்களம் உண்டாகட்டும். நான் வருகிறேன்.
14
கசன் சஞ்சீவினி வித்தையுடனும் மகிழ்ச்சியுடனும் தேவலோகம் திரும்பிச் செல்கிறன்.
15



ததீசி முனிவரின் தியாகம்
கருத்து: சரஸ்வதி * கதை: ஆர்வி.
அஸ்வினி குமாரர்கள் இறந்தவர்களைக் கூட பிழைக்க வைக்கும் திறன் படைத்த மருத்துவர்கள். அவர்கள் பிரம்ம வித்தை- யைக் கற்க விரும்பினார்கள். இந்திரனுக்கு இது பிடிக்கவில்லை. பிரம்ம வித்தை- அவர்களுக்குத் தெரிந்தால் தன் பதவிக்கு ஆபத்து என்று அவன் நினைத்தான். அத னால் அவர்களுக்கு யாரும் பிரம்ம வித்தை யைக் கற்றுத்தரக்கூடாது என்று ஆணை- யிட்டிருந்தான். மீறினால் வஜ்ராயுதத்தி- னால் கற்றுக் கொடுப்பவரின் தலை வெட்டப் பட்டு விடும். இதை அறிந்த- அஸ்வினி குமாரர்கள்....
படம் ராமணி..
1
ததீசி முனிவரிடம் வந்து.....
சுவாமி! தாங்கள்- தாம் அருள் புரிய வேண்டும். எங்- களுக்குப் பிரம்ம வித்தையைக் கற் பிக்க வேண்டும். இந்திரன் ஆணைக் குப் பயந்து எல்லா ரும் மறுக்கிறார்கள்.
அப்படியா? கல்வியை வேண்டி நின் றால், பயமோ பேராசையோ இல்லாமல் கற் றுத் தருவது- தான் தர்மம். ஆகவே, உங்கள் விருப்பப் படியே ஆகட்டும்.
2
இந்திரன் ஆணையிலிருந்து மீள ஒரு வழி இருக்கிறது. ஆனால் அப்படிச் செய்யத் தயக்கமாய் இருக்கிறது.
எதுவாயினும் தயங்க வேண்டாம்! உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள்.
3
ததீசி முனிவர் மனமுவந்து அனுமதி வழங்கியதால் அவரது தலையை வெட்டி, மருந்திட்டு, தனியே வைத்து விட்டு, ஒரு குதிரையின் தலையைக் கொண்டு வந்து அவரது உடலில் பொருத்தினார்கள். குதிரைத் தலையுடன் முனிவர் பிரம்ம வித்தையை அஸ்வினி குமாரர்களுக்கு உபதேசித்தார்.
4



இதையறிந்த இந்திரனுக்கு மகா-
கோபம். வஜ்ராயுதத்தை ஏவினுன்.
5
அஸ்வினி குமாரர்கள் மறு கணம்...
6
சுவாமி! மன்னித்
தருள வேண்டும்.
எங்களுக்கு விடை
தர வேண்டும்.
நல்லது,
போய்வாருங்-
கள்!
சில நாட்களில் உண்மையிலேயே
இந்திர பதவிக்கு ஆபத்து வந்து விட்டது.
அரக்கன் ஒருவன் யாகம் செய்த போது—
அக்கினி குண்டத்திலிருந்து விருத்திராசுரன்
என்ற அசுரன் தோன்றினுன்.
7
நீ. போய் இந்திரனை
விரட்டி விட்டு, தேவ
லோகத்தைப் பிடித்துக்
கொள்!
தேவர்கள் எதிர்த்தார்கள். அவர்கள்
ஏவிய ஆயுதங்களையெல்லாம்—
விருத்திராசுரன் விழுங்கிக் கொண்டி
ருந்தான்.
8


இந்திரன் செய்வதறியாது பிரம்மாவிடம் ஓடினான்.
ஐயனே! காப்பாற்றுங்கள்!
9
பிரம்மா பகவானைத் துதித்தார்; பிறகு—
ததீசி முனிவரின் எலும்புகளைக் கொண்டு வந்து, ஆயுதமாக உபயோகித்தால் அசுரனைக் கொல்லலாம்!
10
இந்திரன் ததீசி முனிவரிடம் வந்தான். அவரைப் பலவாறாகத் துதித்தான்.
11
சுவாமி! என் பிழை பொறுத்து, எனக்கு உதவ வேண்டும்.
அண்டினவர் பகைவரானாலும் உதவுவது நம் கடன். அப்படியே ஆகட்டும்.
சுவாமி! ஆயுதங்கள் செய்யத் தங்களுடைய எலும்புகள் வேண்டும். வேறு வழியால் அசுரனைக் கொல்ல முடியாதாம்.
இவன் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள என் உடலைக் கேட்கிறான். ஆனால் என்ன? என்றாவது ஒரு நாள் அழியப்போகும் இந்த உடல் யாருக்காவது பயன்படுமானால் வேறு என்ன வேண்டும்!
12



13
முன்பு என் தலையை
வெட்ட விரும்பினாய்.
இப்போது என்
எலும்புகளை
யாசிக்கிறாய்.
பரவாயில்லை,
எடுத்துக் கொள்!
இந்திரன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே
நிஷ்டையில் அமர்ந்த முனிவரின் உயிர் உடலை
விட்டு நீங்கிற்று. காட்டு விலங்குகள் வந்து,
உடலிருந்த தசையையும் மாமிசத்தையும்
தின்றன.
14
தேவலோகச் சிற்பி
விஸ்வ கர்மா, அந்த
எலும்புகளை ஆயுத
மாகச் செய்து தர,
அந்த ஆயுதங்களால்
அசுரன் அழிந்தான்.
இந்திர பதவி
நிலைத்தது.
15
16
பகைவனுக்கு அருளிய
தியாகசீலரான அந்தத்
தவ முனிவரின் உயிர்
பரமபதம் பெற்றது.



கோகுலத்தில் ஒரு நாள்...
பாகவதக் கதை : ஆர்வி
படம் : சங்கர்...
மதுமங்களன், சாண்டில்ய மகரிஷியின் மைந்தன். கண்ணனின் அன்னை யசோதை அந்த ரிஷியின் அனுமதி பெற்று மதுமங்களனுக்குத் தன் வீட்டிலேயே அன்னமிட்டு வந்தாள். ஒரு நாள் நண்பர்கள் எல்லாரும் நதிக்கரையில் அன்னம் புசிக்க அமர்ந்தபோது ...
கோகுலத்தில் கண்ணன் புரிந்த லீலைகள் எத்தனையோ! யமுனை நதிக்கரையில், மர நிழலில் நண்பர்கள் புடைசூழ அமர்ந்து, வேடிக்கையும் விளையாட்டுமாய் ஆடிப் பாடுவான். நண்பர்கள் தங்கள் தங்கள் வீடுகளிலிருந்து கொண்டுவரும் தின்பண்டங்களையெல்லாம் எல்லாருக்கும் பகிர்ந்து அளித்துவிட்டுத் தானும் உண்பான்.
1
கண்ணு! இதோ பார், தயிர்வடை! உனக்காக எங்க அம்மா நிறையக் கொடுத்திருக்கிறாள்!
கொண்டா, கொண்டா! எல்லாருக்கும் கொடுக்கலாம். முதல்ல கீழே இறங்கி வாடா!
2
மது! எல்லாரும் அவரவர் வீட்டிலிருந்து எனக்கு ஏதாவது உண்ணக் கொண்டு வருகிறார்கள். நீ ஒரு நாளும் ஒன்றும் கொண்டு வரவில்லையே. இன்று எனக்கு உன் வீட்டிலிருந்து சாப்பிட ஏதாவது கொண்டு வந்தால்தான் ஆயிற்று! இல்லாவிட்டால் உன்னை விடமாட்டேன்!
மது வீட்டுக்கு ஓடி, கண்ணனுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுக்கும்படித் தன் தாய் பூர்ணமாஸியிடம் போய்க் கேட்டான்.
3
குழந்தாய்! நம் வீட்டில் இன்னும் சமையலே ஆகவில்லையே. உன் தந்தையின் நித்ய கர்மாக்கள் முடிய மாலைப் பொழுது ஆகிவிடும். அதுவரையில் எல்லாரும் பட்டினிதான். அதற்குப் பிறகு தான் எல்லாம். இரு; வீட்டில் ஏதாவது இருக்கிறதா, பார்க்கிறேன்.


சீக்கிரம் பாரம்மா! கண்ணன், பாவம், பசியோடு காத்திருப்பான்!
குழந்தாய்! என்ன சோதனை பார்! வீட்டில் புளித்த மோரைத்தவிர ஒன்றுமேயில்லை. இருந்தாலும் அதில் சக்கரை கலந்து தருகிறேன். அதையே கொண்டுபோய்க் கொடு!
என்னம்மா இது! இதையா கொண்டு போவது!
மதுமங்களன் சக்கரையிட்ட புளித்த மோருடன் யமுனைக் கரைக்கு வந்தான். நண்பர்களோடு வேடிக்கையும் விளையாட்டுமாய்ப் பேசிக்கொண்டிருந்த கண்ணனைப் பார்த்தான்.
விதம் விதமான தின்பண்டங்களை யெல்லாம் விட்டு விட்டு, போயும் போயும் இந்தப் புளித்த மோரையா கண்ணனுக்குக் கொண்டுபோய்க் கொடுப்பது! சேசே! அவமானம்.
மதுமங்களன் மரத்தின் மறைவில் நின்றபடி அந்தப் புளித்த மோரைக் கண்ணனுக்குக் கொடுக்க வெட்கப்பட்டு, அதைத் தானே குடிக்கத் தொடங்கினன்.


கண்ணனிடம் இதை மறைக்க முடியுமா? அவன் மோரைக் குடிப்பதைக் கண்ணன் எப்படியோ பார்த்து விட்டான்.
8
டேய் டேய்! உங்கம்மா எனக்காகக் கொடுத்திருக்கிறாள். அதை வந்து நீயே குடிக்கிறாயே! திருடனுக்கு மேல் பெரிய திருடன் மாதிரி!
கண்ணன் ஓடி வருவதற்குள் மது அந்த மோர் அத்தனையையும் குடித்து விட்டான். கடைவாயிலிருந்து மோர் வழிந்து கொண்டிருந்தது.
9
பார்த்தாயா! என்னை ஏமாற்றி விட்டாயே! எவ்வளவு ருசியான மோர்! ஆகா, என்ன ருசி!
10
என்னடா கண்ணா! அவன் எச்சிலைப் போய் ருசி என்கிறாயே!
போடா! உனக்கு என்ன தெரியும்? அது உனக்கு எச்சில்! எனக்கு அவன் அன்போடு கொண்டு வந்தது அமுதம் மாதிரி!
11
இறைவன் எளியவன்! பக்தனுடைய பக்திக்குக் கட்டுப்பட்டவன்! அவனது லீலையே அற்புதம்!
இந்தக் காட்சியைக் கண்ட வானவர்கள் கண்ணன் மீது மலர் மாரி பொழிந்தார்கள். பிரம்மதேவர் இடையில் தோன்றி...



காஷ்மீர் சால்வை
விஜயரங்க சொக்கலிங்க மன்னர் திருச்சியை ஆண்ட காலம். அவர் ஒரு சமயம் பரிவாரங்களுடன் திருச்சி மலைக்கோட்டை சென்று உச்சியில் கோயில் கொண்டிருக்கும் விநாயகப் பெருமானையும் மலையடிவாரத்தில் குடிகொண்டிருக்கும் அம்பாளையும் தரிசித்து-விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார்.
ஆகா! சுவாமிகள் தரிசனம் கிடைத்தது என்ன பாக்கியம்! அமைச்சரே! தியானம் கலையும்வரையில் காத்திருந்து அவரது ஆசி பெற விரும்புகிறேன்.
தங்கள் சித்தம்.
நீடூழி வாழ்க! நின் கொற்றம் சிறப்பதாக!
சில்லெனக் குளிர்காற்று அடித்துக் கொண்டிருந்தது.
இந்தக் குளிரில் சுவாமிகள் அமர்ந்திருக்கிறாரே! என்ன வேதனை!
அமைச்சரே! அவசரமாக விலையுயர்ந்த அருமையான காஷ்மீர் சால்வை ஒன்றை வரவழையுங்கள். சுவாமிகளுக்கு அடக்கமாக அதைப் போர்த்திவிட்டுத்தான் இந்த இடத்தைவிட்டு நாம் அகலுகிறோம்.
உத்திரவு அரசே! இப்போதே ஏற்பாடு செய்கிறேன்!



மன்னர் அந்தச் சால்வையைப் பணிவோடு சுவாமிகளிடம் எடுத்துச் சென்றார்.
அரசர் பெருமானே! அற்புதமான காஷ்மீரத்துச் சால்வை இது! மிகவும் அருமையானது.
அப்படியா, மெத்த மகிழ்ச்சி!
6
சுவாமி! குளிர் நடுக்குகிறது. இந்தச் சால்வையை என் கையாலேயே தங்கள் திருமேனியில் போர்த்த விரும்புகிறேன். எனக்கு அந்தப் பாக்கியத்தை அருள வேண்டுகிறேன்.
7
மன்னு! உன் விருப்பப்படியே ஆகட்டும்.
8
சற்றுப் பொறுத்து.....
தாயுமான சுவாமிகள் அரசர் போர்த்திய பொன்னுடையுடன் தெருவில் இறங்கி நடக்க, எதிரே ஓர் ஏழைச் சிறுமி குளிரில் நடுங்கிக்கொண்டு நிற்பதைப் பார்த்தார்.
9
குழந்தாய்! இப்படி அருகில் வா!
சுவாமிகளே! அந்தச் சிறுமியைத் தீண்டாதீர்கள். அவள் அரிஜனச் சிறுமி!
தெருவில் இருந்த மற்றொருவர்
ஏ பெண்ணே! என்ன திமிர் உனக்கு! அவர் தெரியாமல் கூப்பிட்டால் நீ போய்விடுவதா!
10
தாயுமான சுவாமிகள் அந்தச் சிறுமியை அருகில் அழைத்து, மன்னர் அளித்த சால்வையை எடுத்து அவளுக்குப் போர்த்திவிட்டார். வணங்கினார்.
போய் வா, தாயே!
11
கூட்டத்திலிருந்த ஒற்றன் அரசரிடம் இந்தச் செய்தியைக் கூற ஓடினான்.
பெருமானே! மலைக்கோட்டை அருகே அவமானகரமான செய்தி நடந்துவிட்டது. தாயுமான சுவாமிகளுக்குத் தாங்கள் கொடுத்த சால்வையை அவர் அரிஜனச் சிறுமிக்குத் தந்து விட்டார். ஊரே பரபரக்கிறது.



ஆ, என்ன அவமானம்! பணிந்து அன்புடன் நான் தந்த பரிசை இப்படியா ஒரு தாழ்ந்த குலச் சிறுமிக்குத் தூக்கித் தருவது? உடனே அழைத்து வாருங்கள் அவரை இங்கே!
பிரபு! நிதானமாகப் பேசுங்கள். அவர் மகான்!
அக்கறையில்லை. என்னை அவமானப்படுத்திய அவரை ராஜசபையில் வைத்து அதற்கான காரணத்தைக் கேட்டே ஆகவேண்டும். ஒற்றனே, உடனே போ!
14
உத்தரவு.
சற்று நேரத்தில் ராஜசபைக்குத் தாயுமானவர் வந்து நின்றார்.
சுவாமிகளே! மன்னியுங்கள். என்னை அவமானப்படுத்துவது போல் தாங்கள் நடந்துகொண்டதற்கு என்ன காரணம் என்பதை நான் அறியலாமா?
நான் உன்னை அவமானப்படுத்தினேனா?
15
என்னை அவமானப்படுத்தினால் என்ன, என் பரிசை அவமானப்படுத்தினால் என்ன? நான் உங்களுக்குப் பக்தியோடு மரியாதை செய்தது தவறு?
16
ஹஹ்ஹா! அந்த அரிஜனச் சிறுமிக்கு சால்வை தந்ததைச் சொல்கிறாயா?
ஆம் சுவாமிகளே!
மன்னா! நீ உன்னைக்காட்டிலும் நான் உயர்ந்தவன் என்று எண்ணி எனக்குச் சால்வை போர்த்தி மகிழ்ந்தாய் அல்லவா? அதேபோல் நான் என்னைக் காட்டிலும் உயர்ந்தவளுக்கு அந்தப் பொன்னாடையைப் போர்த்தி மகிழ்ந்தேன். இதில் அவமானம் எங்கே வந்தது? நீ சிறந்த பக்திமான் ஆயிற்றே. உனக்குத் தெரியவில்லையா?
17
என்ன சொல்கிறீர்கள், சுவாமி! அந்த அரிஜனச்சிறுமி உங்களைவிட உயர்ந்தவளா?
மன்னா! இறைவன் எல்லா உயிரிலும் இருக்கிறான். குளிரில் நடுங்கிக்கொண்டிருந்த அரிஜனச் சிறுமி வேறு யாருமல்ல. என்னைச் சோதிக்க வந்த சாட்சாத் அகிலாண்டேசுவரிதான். எல்லா உயிரிலும் தான் இருப்பதை அம்பாள் எனக்கு அந்தச் சிறுமி வடிவிலும் இருந்து காட்டியதை நான் கண்டு தரிசித்தேன். ஆகவே பிரியமான அந்த சால்வையை அம்பாளுக்குக் காணிக்கை ஆக்குவது போல அந்தச் சிறுமிக்குக் காணிக்கையாக்கினேன். உன் அன்புப் பரிசான சால்வை இறைவிக்குப் போய்ச் சேர்ந்ததற்கு நீ பெருமை அல்லவா படவேண்டும்?
18
அரசனும் தேவியும் தாயுமானவரின் காலில் விழுந்து வணங்கினார்கள்.
19
எங்கள் அறியாமையை மன்னித்தருள வேண்டும்!




சிந்தாத பால் கிண்ணம்
கருத்து சுவாமி விவேகானந்தர்
கதை பரமஹம்சதாஸ்
படம் சங்கர்...
வியாச முனிவரின் மகன் சுகதேவர். அவர் பிறக்கும்போதே நிறைநிலை எய்திய ஞானியாகப் பிறந்தவர். சுகதேவருக்கு வியாசர் தமக்குத் தெரிந்த ஞானத்தையெல்லாம் கற்பித்தபின் –
சுகதேவ், எனக்குத் தெரிந்த ஞானமெல்லாம் உனக்குக் கற்பித்து விட்டேன். இனி உன்னை ஜனகரிடம் அனுப்பி வைக்கிறேன்.
ஜனக மகாராஜாவிடமா? எதற்காகத் தந்தையே?
2
பிரம்மத்தைப்பற்றி அவர் உனக்கு உபதேசிப்பார். அதற்குத் தகுந்தவர் அவர்தான்
ஜனகரை 'விதேகர்' என்று அழைப்பார்கள். 'விதேகர்' என்பதற்கு 'உடம்பில்லாமல் இருப்பவர்' என்று பொருள். அதாவது, உடம்பின் நினைவே இல்லாமல் வாழ்பவர். அரசராக இருந்து பெருங்காரியங்கள் செய்துகொண்டிருந்தாலும் தான் உடலல்ல என்ற ஞானத்திலிருந்து விலகாதிருப்பவர். சுகதேவர் தம்மிடம் வரப்போவதை ஞானதிருஷ்டியால் ஜனகர் அறிந்ததும் –
காவலர்களே, வியாச முனிவரின் மகனை சுகதேவர் வருவார். அவரை நீங்கள் கவனிக்கவோ உபசரிக்கவோ கூடாது.
மகான் சுகதேவரை உபசரிக்கக் கூடாதா?
4
என்ன விந்தை? அரசரின் கட்டளை விசித்திரமாக இருக்கிறதே!


குறிப்பிட்ட தினம் மகான் சுகதேவர் ஜனகரின் அரண்மனைக்கு வந்தார். நாடு போற்றும் ஞானியான அவரை யாரும் அங்கே வரவேற்கவில்லை. மூன்று நாட்களாயின. மூன்று நாட்களும் சுகதேவர் அரண்மனை வாயிலில் தாம் உட்கார்ந்த இடத்திலேயே அமைதியாக உட்கார்ந்திருந்தார்.
நான்காவது நாள் – ஜனக மகாராஜா தமது மந்திரி பிரதானிகள் புடைசூழ, சகல மரியாதைகளுடன் சுகதேவரை வரவேற்க வந்தார்.
5
6
7
சுகதேவரை அழைத்துச் சென்று வாசனைநீரில் குளிப்பாட்டினார்கள். அற்புத ஆடைகள் அணிவித்தனர். சுவையான உணவு தந்தார்கள். இப்படி எட்டு நாட்கள் ராஜோபசாரம் நடந்தது. ஆனால் அது காரணமாகச் சுகதேவர் முகத்தில் எந்த மாறுதலும் தோன்றவில்லை.
ஒன்பதாவது நாள் அரசசபைக்குச் சுகதேவர் அழைத்துச் செல்லப்பட்டார். இனிய வாத்திய கோஷங்களுடன் அரண்மனையில் அரசருக்கு முன் அழகிய பெண்களின் நடனம் நடந்துகொண்டிருந்தது. அதைத் தவிர இன்னும் பல கேளிக்கைகள்.
8
சுகதேவரே,
வருக!


வரவேற்ற அரசர் சுகதேவரிடம் பால் நிரம்பிய கிண்ணத்தைத் தந்தார். அதில் விளிம்புவரை பால் ததும்பி நின்றது.
9
சுகதேவ்! இந்தக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு ஆரவாரம் மிக்க இந்தச் சபையை நீ ஏழு முறை சுற்றிவர வேண்டும். ஆனால் ஒரு துளிப் பால் கூடக் கீழே சிந்தக் கூடாது.
சுகதேவர் சிறுவராக இருந்தாலும் நிறைந்த ஞானி. அவராக அனுமதித்தாலன்றி அவர் மனதுக்குள் எந்த உலக நிகழ்ச்சியும் நுழைய முடியாது. ஆகவே அந்தப் பரபரப்பான அரசசபையின் நிகழ்ச்சிகள் அவரைப் பாதிக்கவில்லை. அமைதியாகப் பால் சிந்தாமல் ஏழு முறை அவர் சபையைச் சுற்றி வந்தார்.
10
ஆகா! என்ன மன ஒருமைப்பாடு! எத்தகைய திடச் சித்தம்!
ஏழு முறை சுற்றித் துளியும் பால் சிந்தாமல் கிண்ணத்தைச் சுகதேவர் ஜனகரிடம் ஒப்படைத்தார்.
மனக்கட்டுப்பாடு உடைய சுகதேவரைப் போன்ற நிறைஞானிகளுக்கு யாரும் போதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை இதிலிருந்து நாம் தெரிந்துகொள்கிறோம் அல்லவா?
நீ கற்றுக் கொண்டிருக்கும் ஞானத்தையேதான் நான் உனக்கு மீண்டும் சொல்லித்தர வேண்டும். நீ நிறைஞானி! உனக்குக் கற்பிக்கப்பட வேண்டியது எதுவுமில்லை. ஆகவே நீ வீடு திரும்பலாம்.
11



அம்பரீஷ
மகாராஜா
கதை: மங்களம் ஆத்ரேயி
படம்: லதா.,
சிறுவர் பகுதி
அம்பரீஷ மகாராஜா முதல் நாள் விரதம் இருந்துவிட்டு மறுநாள் பாரணை செய்ய அமர்ந்தார். அப்போது துர்வாசர் தோன்றினார்.
1
வாருங்கள்! மகரிஷே, தாங்களும் என்னோடு சேர்ந்து உணவு அருந்த வேண்டும்!
மன்னன் வேண்டுகோளை துர்வாச முனிவர் ஏற்றுக்கொண்டார்.
2
நான் யமுனை சென்று நீராடி வழிபாடுகளை முடித்துக்கொண்டு திரும்புகிறேன்.
துர்வாசர் வெகுநேரம் திரும்பாததால் பாரணை செய்ய வேண்டிய நேரம் தவறிவிடுமோ என அஞ்சிய மன்னர், அரண்மனை புரோகிதரின் சம்மதம் பெற்று துளசியையும், கங்காஜலத்தையும் உட்கொண்டார்.
3
சிறிது நேரத்தில் துர்வாசர் யமுனையிலிருந்து திரும்பினார். அரசன் தனக்காகக் காத்திராமல் பாரணையை முடித்துவிட்டதையறிந்து கடுங்கோபம் கொண்டார்.
4
தவ வலிமையால் துர்வாசர் ஒரு பூதத்தை உண்டாக்கினார்.
5
அம்பரீஷனைக் கொன்றுவிடு!
அம்பரீஷனே விரும்பியிருந்தால் அந்த பூதத்தை அழித்திருக்க முடியும், அல்லது துர்வாசருக்குப் பதில் சாபம் கொடுத்திருக்க முடியும். ஆனால் அப்படிச் செய்யவில்லை. கடவுளே கதியென நம்பியிருந்தார்.



6
திருமாலின் சுதர்சன சக்கரம் அங்கு தோன்றி பூதத்தை எரித்தது. துர்வாசரையும் துரத்த ஆரம்பித்தது.
7
துர்வாசர் பயந்து இந்திர லோகம், சிவ லோகம், பிரம்ம லோகம் ஆகிய இடங்களுக்குச் சென்று தன்னைக் காப்பாற்ற வேண்டினர்.
8
9
எங்களால் உன்னைக் காப்பாற்ற இயலாது!
கடைசியில் துர்வாசர் வைகுண்டத்திலிருந்த விஷ்ணுவை சரண் அடைந்தார்.
10
11
பகவானே என்னைக் காப்பாற்றுங்கள். சுதர்சன சக்கரம் என்னைக் கொல்ல வருகிறது.
முனிவரே, அம்பரீஷனைக் காப்பதற்காகத் தோன்றிய இந்தச்சக்கரத்திடமிருந்து உம்மை மீட்க என்னாலும் முடியாது. நான் பக்தர்களுக்கு அடிமை!
12
நானும் உங்கள் பக்தன் தானே? எனக்கும், அம்பரீஷனுக்கும் இடையில் இப்படி வித்தியாசம் காட்டலாமா?


13
என்னுடைய தயை உங்கள் இருவருக்கும் உண்டு. ஆனால் நான் இப்போது அம்பரீஷனைத்தான் காப்பாற்ற வேண்டும். ஏனெனில் ஒரு பக்தன் தன் மனைவி மக்கள் சுற்றத்தார் சொத்து எல்லாவற்றையும் துறந்து என்னையே சரண் அடையும்போது நான் அவனை எப்படிக் கைவிட முடியும்? அவன் என்னை விட உயர்ந்தவன். என் மனைவி லக்ஷ்மியைக்காட்டிலும்கூட உயர்ந்தவன்.
14
பின்பு என்னதான் வழி பிரபோ?
அம்பரீஷனையே சரணடைவதுதான் இந்த ஆபத்திலிருந்து நீ விடுபட ஒரேவழி! சக்கரம் அதன்பின் உன்னைத் துரத்தாது!
15
அம்பரீஷா, பகவானே கதியென்று இருக்கும் உன்மீது பகவான் கொண்டுள்ள கிருபைதான் எவ்வளவு மகத்தானது! என்மீதுகூட அவருக்குக் கிருபை இல்லையே? உன் பெருமையை இப்போதுதான் உணர்ந்தேன்!
16
17
சுதர்சன சக்கரமும் துரத்துவதை நிறுத்தியது.

# நீதிக் கதைகள்-02



2